# போரூர் - பூந்தமல்லி மெட்ரோ பாதை

## மண் ஆய்வுக்கு ஏற்பாடு




– நமது நிருபர்–

மெட்ரோ ரயில் இரண்டாவது திட்டத்தில், போரூர் – பூந்தமல்லி இடையே, மெட்ரோ ரயில் பாதைக்கு, தனியார் நிறுவனத்தால் மண் ஆய்வு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் இரண்டாவது திட்டத்தில், 69,180 கோடி ரூபாய் செலவில், மூன்று வழி தடங்களில், 118.9 கி.மீ.,க்கு, மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்தில், கலங்கரை விளக்கம் – பூந்தமல்லி இடையே, 26.1 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைய உள்ளது.

இப்பாதை மற்றும் நிலையங்கள் அமையவுள்ள இடங்களில், மண் ஆய்வு பணி, பல கட்டங்களாக நடந்து வருகிறது.

இப்பாதையில், போரூர் ராமசந்திரா மருத்துவமனையில் இருந்து, பூந்தமல்லி பைபாஸ் சாலை வரை, 7.18 கி.மீ., துாரத்திற்கு, தரைக்கு மேல், சிமென்ட் துாண்கள் அமைத்து, மெட்ரோ பாதை அமைகிறது.

இப்பாதையில், ராமசந்திரா மருத்துவமனை, அய்யப்பன்தாங்கல், எம்.டி.சி., பஸ் பணிமனை, காட்டுப்பாக்கம், குமணன் சாவடி, கரையான் சாவடி, பூந்தமல்லி பஸ் நிலையம் மற்றும் பூந்தமல்லி பைபாஸ் சாலையில், நிலையங்கள் அமைகின்றன.

இப்பாதை மற்றும் நிலையங்களுக்கு தேவையான இடங்களில், மண்ணின் உறுதி தன்மை குறித்து, தனியார் நிறுவனத்தால் ஆய்வு நடத்தப்பட உள்ளது. இப்பணி விரைவில் துவங்க உள்ளது. 'சென்னை மெட்ரோ ரயில் இரண்டாவது திட்டம், 2026ல் நிறைவடையும்' என, அதிகாரிகள் தெரிவித்தனர்.